**உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியத்தின் - 2013**

----------------------------------------------------------------------------------------------------------------

உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஐந்தொகை மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.3 நிதிசார் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களற்ற கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காமை

நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாக காசுப் பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நிதியமானது மீளாய்வாண்டிற்கென காசுப்பாய்ச்சல் கூற்று ஒன்றை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்தின் கீழுள்ள ரூபா 326,119 கூட்டுத்தொகையுடைய விளையாட்டுத் துறைப் பொருட்களில் தீவிரவாதத் தாக்குதல்களினால் அழிவுக்குள்ளான ரூபா 152,400 க்கான விளையாட்டுத்துறைப் பொருட்களைப் பதிவழிப்பதற்குத் திறைசேரி அங்கீகாரம் வழங்கிய போதும், ரூபா 167,864 க்கான விளையாட்டுத் துறைப் பொருட்கள் பதிவழிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 15,464 கூடுதலாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.3 வீடமைப்பு நலனுக்கான கடன் திட்ட நிதியம்

ஆண்டின் இறுதியில் வீடமைப்பு நலனுக்காக கடன் திட்ட நிதியத்தில் இருந்த மீதி ரூபா 30,059,078 ஆகும். வீடமைப்பு நலனுக்கான கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான தவணைப் பணம் மற்றும் வட்டி அறவிடப்படுதல் தொடர்பான கடன் பெற்றவர்களின் விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவு | செயற்படாதிருக்கும் நிதியங்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமாயினும், 2006 ஆம் ஆண்டு முதல் செலவினத் தலைப்பு நிதியேற்பாட்டிலிருந்து ஊக்குவிப்புப்படி வழங்கப்படுவதால் உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியம் செயற்படாத நிதியம் ஆகியது. இதனால் அந்நிதியத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 5,109,075 க்கான காணிகளும் கட்டிடங்களுக்குமுரிய சகல விபரமும் தெரியுமாறு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 2.5. முகாமைத்துவ வினைத்திறமையின்மை

மீளாய்வாண்டு முடிவில் நிதியத்தின் ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 5,361,330 கூட்டுத்தொகையுடைய காணிகள், கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், விளையாட்டுத் துறைப் பொருட்கள் என்பன நிதிய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமையால் அவற்றைத் திணைக்களம் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் நிர்வாகம்

(ஆ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்